ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2276/51 - 2022 අප්‍රේල් මස 22 වැනි සිකුරාදා - 2022.04.22

*2276/51 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

***1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நகர அபிவிருத்திக் கருத்திட்ட (விசேட ஏற்பாடுகள்) சட்டம்***

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்திக் கருத்திட்ட (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் பரிந்துரையின் பேரில், கீழ்க்காணும் அட்டவணையில் தெளிவாக விபரிக்கப்பட்டுள்ள காணியானது, மாலபே மத்தியதர வகுப்பினருக்கான வீடமைப்புக் கருத்திட்டத்திற்கான பிரவேச வீதியினை நிர்மாணிக்கும் நோக்கத்திற்காக உடனடியாகத் தேவைப்படுகின்றது என நான் கருதுவதனால், சொல்லப்பட்ட காணியானது தொடர்புடைய நோக்கத்திற்குத் தேவைப்படுகின்றதென இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.*

**கோட்டாபய ராஜபக்ஷ,**
*சனாதிபதி.*

*சனாதிபதி செயலகம்,*
*கொழும்பு,*
*2022, ஏப்பிறல் 11.*

1A - G 36625 — 15 (2022/04)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

*மேல் மாகாணத்தின், கொழும்பு மாவட்டத்தில் கொலொன்னாவை பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 502சி-சல்மல் உயன கிராம அலுவலர் பிரிவினுள் ஹல்பராவ கிராமத்தில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் (காணி) பி. எஸ். ரணவீர அவர்களால் 2021.11.29 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட திட்டத்தில் இலக்கம் 01 இன் மூலம் காட்டப்பட்டுள்ள சுமார் 60 பேர்ச்சஸ் விஸ்தீரணம் கொண்ட ஹல்பராவ மற்றும் ஹல்கஹவத்த எனும் பெயருடைய காணிகளுக்கு எல்லைகள் பின்வருமாறு :*

**துண்டு இலக்கம் 01**

வடக்கு : *நகர அபிவிருத்தி அதிகார சபை உரிமை கோரும் காணி ;*

கிழக்கு : *இலக்கம் 70, எஸ். தீ எஸ். ஜயசிங்ஹ மாவத்தை, கொகுவல, நுகேகொடையில் அமைந்துள்ள இன்ரநெஷனல் கன்ஸ்ட்ரக்ஷன் கன்சோட்டியம் பிறைவேட் லிமிட்டெட் உரிமை கோரும் காணி ;*

தெற்கு : *நகர அபிவிருத்தி அதிகார சபை உரிமை கோரும் காணி ;*

மேற்கு : *வரிமதிப்பீட்டு இலக்கம் 484/ 2/ 1 ரெப்மெக் ஹோல்டிங்ஸ் (தனியார்) கம்பனி உரிமை கோரும் காணி மற்றும் உரிமையாளர் கண்டுபிடிக்கப்படாத காணி.*

EOG *04-0130*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.